



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 333 | 4 Pages | 28.6.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 333 | 4 பக்கங்கள் | 28.6.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கங் கடை**

**விளக்கம்:**
**கொலையால் நன்மையாக விளையும் ஆக்கம் பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.**

## பிரான்சை புரட்டி எடுத்த கனமழை நாடாளுமன்றத்தில் மழைநீர் கசிந்ததால் பரபரப்பு



பாரிஸ், ஜூன் 28

பிரான்ஸ் நாட்டில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் வாட்டி எடுத்து வந்தது. இந்த நிலையில், தற்போது அங்கு கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. கடந்த ஓரிரு தினங்களாக பிரான்ஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளை கனமழை புரட்டி எடுத்தது. மேலும் மழையோடு புயல் காற்றும் வீசியதால் மரங்கள் முறிந்து விழுந்தன.

மழையை தொடர்ந்து பாரிஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களின் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சில இடங்களில் கார்கள் மழைநீரில் அடித்துச் செல்லப்பட்டன. கனமழை எதிரொலியாக சுமார் 1 லட்சத்து 10 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்நாட்டில் உள்ள பொதுமக்கள் கடும் அவதியடைந்துள்ளனர்.

இதனிடையே, கனமழையால் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கி பிரான்சில் 12 வயது சிறுவன் உள்பட 2 பேர் உயிரிழந்ததாகவும், 17 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறுபகுதிகள்மழைவெள்ளத்தால்பாதிக்கப்பட்டுள்ளநிலையில், பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மழைநீர் கசிந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ்நாடாளுமன்றத்தில்மத்தியகிழக்குநாடுகளில்ஏற்பட்டுள்ள போர் பதற்றம் தொடர்பான விவாதம் நடந்து கொண்டிருந்தது. அப்போது அவையில் உரையாற்றிய பிரதமர் பிரான்கோயிஸ் பெய்ரு, அவையின் மேற்கூரையில் இருந்து மழைநீர் கசிவதை அங்குள்ள ஊழியர்களிடம் சுட்டிக்காட்டினார். இதையடுத்து நாடாளுமன்ற துணை தலைவர் ரோலண்ட் லெஸ்கர், அவையை சிறிது நேரம் ஒத்திவைத்தார். சுமார் 15 நிமிடங்களுக்கு பிறகு அவை மீண்டும் கூடியபோதும், மழைநீர் கசியாமல் இருக்க நடவடிக்கை தேவையான எடுக்கப்பட்டுள்ளதாக ரோலண்ட் லெஸ்கர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 4.8 ஆக பதிவு

பீஜிங், ஜூன் 28

சீனாவில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 9.56 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

95 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 34.71 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 98.54 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

## இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம்; டொனால்டு டிரம்ப்



வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்க ஜனாதிபதிபாக டொனால்டு டிரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றார். பதவியேற்ற உடன் அவர் பல்வேறு நாடுகள் மீது இறக்குமதி வரியை அதிகரித்தார். அதன்பின்னர், சீனாவுடன் ஏற்பட்ட வர்த்தக மோதலை தொடர்ந்து அந்த வரியை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார். அதேவேளை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் அதிக வரி விதித்துள்ளார். இந்த வரிகளை தளர்த்த இந்தியா அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்நிலையில் இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், சீனாவுடன் நாம் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். அனைத்து நாட்டுடனும் தாம் வர்த்தக ஒப்பந்தம் செய்யப்போவதில்லை. ஆனால், நமக்கு சிறந்த ஒப்பந்தங்கள் வர உள்ளன. இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகலாம்' என்றார்.

## ஜப்பானில் சிறுமிகளின் ஆபாச படங்களை சமூகவலைதளத்தில் பகிர்ந்த ஆசிரியர்கள் கைது



டோக்கியோ, ஜூன் 28

ஜப்பானின் அய்ச்சி மாகாணம் நகோயா நகரில் தொடக்கப்பள்ளி ஒன்று அமைந்துள்ளது.அங்குள்ளபள்ளிஆசிரியர்கள் 2 பேர்சக ஆசிரியர்களுடனான சமூகவலைதள குழுவில் சிறுமிகளின் ஆபாச படங்களை பகிர்ந்துள்ளனர். இந்த புகைப்படங்கள் மற்ற சமூகவலைதளங்களிலும் காட்டுத்தீயாக பரவியது. இதுகுறித்த புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதில் நகோயா மற்றும் யோகாகாமா பள்ளி ஆசிரியர்கள் 2 பேர் இந்த புகைப்படங்களை சமூகவலைதளங்களில் பகிர்ந்தது உறுதியானது.

இதையடுத்து போலீசார் ஆசிரியர்களை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். வேலியே பயிரை மேய்ந்தது போல அமைந்த இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பு பெற்றிருக்கும் கமல்ஹாசனுக்கு முதல்அமைச்சர் வாழ்த்து

சென்னை ஜுன் 28

சர்வதேச சினிமா உலகில் இந்தியாவின் பெருமையை உயர்த்தும் விதமாக, நடிகர் கமல்ஹாசன், ஆயுஷ்மான் குரானா ஆகியோர் ஆஸ்கர் விருதுக்கான குழுவில் சேர்வதற்கான அழைப்பைப் பெற்றுள்ளனர். இந்த நிலையில் நடிகர் கமல்ஹாசனுக்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:



உலக அளவில் திரைத்துறையின் உச்சபட்ச விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பினைப் பெற்றிருக்கும் அன்பு நண்பர் கலைஞானி கமல்ஹாசனுக்கு என் வாழ்த்துகள்!


மொழி தேச எல்லைகளைக் கடந்து திரைத்துறையினர் மீது தாங்கள் செலுத்திய பெரும் தாக்கத்துக்கான தாமதான அங்கீகாரமே இது. இன்னும் பல தேடி வரும் உயரம் தங்களுடையது! இவ்வாறுஅதில்தெரிவித்துள்ளார்.

# சென்னை ஆர்பிஐ சுரங்கப்பாதை ஒருவழிப்பாதையாக மாற்றம்

சாலை பணிகள் காரணமாக சென்னை ஆர்பிஐ சுரங்கப்பாதை வருகிற 29ம் தேதி முதல் ஒரு வழிபாதை மாற்றப்பட உள்ளதாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது. கடற்கரை சாலையில் இருந்து பாரிமுனை செல்வோருக்கு எந்தவித மாற்றம் இல்லை.

மறுமுனையில் வருவோர் சுரங்கப்பாதை அணுகு சாலை வடக்கு கோட்டை சாலை முத்துசாமி சாலை போர் நினைவுச் சின்னம் வழியாக செல்ல வேண்டும் என சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது.

# வருவாய் கோட்டாட்சியர் என்று ஏமாற்றி வங்கி அதிகாரியை திருமணம் செய்த பெண் கைது




நாமக்கல், ஜூன் 28

நாமக்கல் மாவட்டம் பெரியமணலியை சேர்ந்தவர் நவீன்குமார்(வயது 29). இவர் கோவையில் உள்ள தனியார் வங்கியில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறார். இவருக்கும் ராமாவரம் புதூர் பகுதியை சேர்ந்த தன்வர்தினி(வயது 27) என்ற பெண்ணுக்கும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் திருமணம் நடைபெற்றது.

திருமணத்தின்போது தன்வர்தினி பொள்ளாச்சியில் வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றி வருவதாக அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர். திருமணம் முடிந்த பிறகு நவீன்குமார் வங்கி பணிக்காக கோவை சென்ற நிலையில், தன்வர்தினி பொள்ளாச்சிக்கு செல்வதாக கூறிவிட்டுச் சென்றுள்ளார். வார விடுமுறை நாட்களில் இருவரும்வீட்டிற்குவந்துகுடும்பத்துடன் நேரம் செலவிட்டுள்ளனர்.

இந்த நிலையில் நவீன்குமாரின் உறவினர் ஒருவர் பொள்ளாச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு வேலையாக சென்றபோது, தன்வர்தினி குறித்து விசாரித்துள்ளார். அப்போது அப்படி யாரும் அங்கு வேலை செய்யவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதனால் சந்தேகமடைந்த நவீன்குமாரின் குடும்பத்தினர், தன்வர்தினி குறித்து விசாரிக்க தொடங்கியுள்ளனர்.

இது குறித்து தன்வர்தினியிடம் கேட்டபோது, தன்னை சென்னையில் உள்ள தலைமை செயலகத்திற்கு பணியிட மாற்றம் செய்து விட்டதாக நவீன்குமாரிடம் கூறியுள்ளார். இருப்பினும் சந்தேகம் தீராத நிலையில், நவீன்குமார் உடனடியாக சென்னைக்கு கிளம்பிச் சென்றுள்ளார். சென்னை தலைமை செயலகம் வரை நேரில் சென்றும், தன்வர்தினி வேலை செய்வதாக கூறிய இடத்திற்கு நவீன்குமாரால் செல்ல முடியவில்லை.

இதையடுத்து தன்வர்தினி தன்னிடம் கொடுத்து வைத்திருந்த சான்றிதழ்களை நவீன்குமார் சோதனை செய்துள்ளார். அப்போதுதான் அவை அனைத்தும் போலியானவை என்பது தெரியவந்துள்ளது. இதனால் தமிழக அரசு முத்திரையை தவறாக பயன்படுத்தி தன்னை ஏமாற்றி திருமணம் செய்ததாக தன்வர்தினி மற்றும் அவரது பெற்றோர் மீது நவீன்குமார் நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறையினரிடம் புகார் அளித்தார்.

இந்த புகாரின் அடிப்படையில் போலீசார் நடத்திய விசாரணையில், வருவாய் கோட்டாட்சியர் என்று கூறி நவீன்குமாரை தன்வர்தினி ஏமாற்றி திருமணம் செய்தது உறுதி செய்யப்பட்டது. தன்வர்தினி 10 மற்றும் 12ம் வகுப்புகளில் நன்றாக படித்து நல்ல மதிப்பெண் பெற்றுள்ளார். சென்னையில் சிவில் இன்ஜினீயரிங் பட்டப்படிப்பு முடித்துவிட்டு, குரூப்1 தேர்வு எழுதிய அவர், நேர்முகத் தேர்வு வரை சென்று தோல்வியடைந்துள்ளார்.

இந்த நிலையில்தான் நவீன்குமாருடன் தன்வர்தினிக்கு திருமண ஏற்பாடுகள் நடந்துள்ளன. அந்த சமயத்தில் தன்வர்தினியிடம் ஒரு நபர் பணம் வாங்கிக்கொண்டு அரசுப் பணி தேர்வில் தேர்ச்சி பெற வைப்பதாக கூறியதாகவும், அதனை நம்பி தன்வர்தினியின் குடும்பத்தினர் அவர் வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றி வருவதாக நவீன்குமாரின் குடும்பத்தினரிடம் கூறி திருமணம் செய்து வைத்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

திருமணம் முடிந்த பிறகும் தொடர்ந்து தன்வர்தினி பொய் கூறி வந்துள்ளார். இந்த நிலையில் தான் நவீன்குமார் சுமார் ஒரு ஆண்டிற்கு பிறகு உண்மையை கண்டறிந்து போலீசில் புகார் அளித்துள்ளார். இதையடுத்து தன்வர்தினியை கைது செய்த போலீசார், அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சேலம் பெண்கள் கிளைச்சிறையில் அடைத்தனர்.

# பரிகார பூஜை செய்வதாக கூறி விவசாயியை கத்தியால் குத்திய சாமியார் கைது

நீலகிரி , ஜூன் 28

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள தூதூர்மட்டம் மகாலிங்க காலனி பகுதியைச் சேர்ந்தவர் சிவகுமார் (வயது54). சாமியாரான இவர் தனது வீட்டிற்குள்ளேயே சாமி சிலை ஒன்றைவைத்துபொதுமக்களுக்குகுறிசொல்லி வருகிறார். இந்த பகுதியில் வசித்து வருபவர் நாகராஜ்(40). இவர் காய்கறி விவசாயம் செய்து வருகிறார்.

நாகராஜ், சிவகுமாருக்கு தேவையான உதவிகளை செய்து வந்துள்ளார். நேற்றிரவு நாகராஜ் வெளியில் சென்று விட்டு வீட்டிற்கு வந்தார். அப்போது சாமியார் சிவகுமார், நாகராஜிடம் தனக்கு மதுபானம் வாங்கி வருமாறு தெரிவித்து பணம் கொடுத்தார். இதையடுத்து நாகராஜ் மது வாங்கி வந்து சாமியாருக்கு கொடுத்தார். அப்போது சிவக்குமார், நாகராஜிடம் உனக்கு மன நிலை சரியில்லை என வெளியில் பேசுகிறார்கள். எனது வீட்டில் வைத்து உனக்கு ஒரு பரிகார




பூஜை செய்கிறேன். அந்த பூஜை செய்தால் உனக்கு எல்லாம் சரியாகிவிடும் என தெரிவித்தார். இதனை நாகராஜும் நம்பி பூஜைக்கு சம்மதம் தெரிவித்தார். சாமியார் சிவக்குமார் பூஜைக்கான ஏற்பாடுகளை செய்து விட்டு நாகராஜை தனது வீட்டிற்கு அழைத்தார். நாகராஜ் அங்கு சென்றதும் பூஜைகளை தொடங்கினார். பூஜையின் போது திருநீர் மற்றும் குங்குமம் ஆகியவற்றை நாகராஜின் மீது வீசினார். திடீரென அங்கு வைத்திருந்த கத்தியை எடுத்து நாகராஜின் தலை மற்றும் நெற்றியில் குத்தினார். வலி தாங்க முடியாத அவர் அலறியடித்தபடி அங்கிருந்து வெளியே ஓடிவந்தார். இதை பார்த்த அக்கம்பக்கத்தி னர் காயம் அடைந்த நாகராஜை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலமாக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார். போலி சாமியார் சிவக்குமார் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.




# சிங்கப்பூர் தூதரக அதிகாரியுடன் விஜய் சந்திப்பு



சென்னை, ஜூன் 28

சிங்கப்பூர் தூதரக அதிகாரி எட்கர் பாங், தமிழக வெற்றிக்கழக கட்சியின் தலைவரும், நடிகருமான விஜய்யை இன்று சந்தித்தார்.

இது தொடர்பான புகைப்படத்தையும் அவர் எக்ஸ் பக்கத்தில் பதவிட்டு ரசிகர்களுக்கு ஒரு கேள்வியை எழுப்பி உள்ளார்.

தமிழ் திரையுலகின் சூப்பர் ஸ்டார் தளபதி விஜய்யை இன்று சந்தித்தேன். விஜய் நடிப்பில் உங்களுக்குப் பிடித்த படம் எது? எனவும் நெட்டிசன்களிடம் கலகலப்பான கேள்வியை எழுப்பி உள்ளார்.

இந்த சந்திப்பு சென்னையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## ஆனித்தேரோட்டம்: 4 ரதவீதிகளில் மின்வாரிய பணிகளை திருநெல்வேலி மண்டல தலைமை பொறியாளர் ஆய்வு



திருநெல்வேலி ஜூன் 28

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், திருநெல்வேலி நகர்ப்புற கோட்டத்தில் திருநெல்வேலி டவுண் பிரிவுக்கு உட்பட்ட காந்திமதி அம்பாள் சமேத நெல்லையப்பர்கோவில் தேரோட்டம் வருகிற 8.7.2025 அன்று நடைபெற உள்ளது. அதன் பொருட்டு தேரோட்டம் நடைபெறுவதற்கு முதல் நாளும் தேரோட்டம் அன்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து திருநெல்வேலி மண்டல தலைமை பொறியாளர் சந்திரா, நான்கு ரத வீதிகளிலும் ஆய்வு பணிகளை மேற்கொண்டார்.

அப்போது அவர், தேரோட்டம் அன்று பாதுகாப்பு கருதி மின் விநியோகம் நிறுத்துவது, தேர் நிலையம் வந்தவுடன் உடனடியாக பணிகள் மேற்கொண்டு மீண்டும் மின்சாரம் வழங்குவது, தேர் செல்லும் நான்கு ரத வீதிகளிலும் தேர் செல்லும் பாதையில் மின் பாதைகளை ஒழுங்கு செய்வது, மற்ற இடங்களுக்கு மாற்று வழியில் மின்சாரம் வழங்குவது உள்பட அனைத்து பணி விவரங்களையும் நேரடிகள ஆய்வில் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் விரிவாக ஆய்வு செய்தார்.

மேலும் தேர் நிலையம் வந்தவுடன் பணிகளை விரைந்து முடிக்க தேவையான தளவாட சாமான்கள், கூடுதல் பணியாளர்கள், பணி அமர்த்தி பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகள் முழுமையாக கடைபிடித்து பணிகள் மேற்கொள்ளவும், தேரோட்டம் நடைபெறும் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு ரத வீதிகளிலும் நடைபெற்ற மேல்நிலை மின் பாதையில் இருந்து புதைவடம் மின் பாதையாக மாற்றியமைக்கப் பட்ட பணிகளை அவர் ஆய்வு செய்தார். தேரோட்டம் நடைபெறும் நான்கு ரத வீதிகளிலும் குறுக்கே சென்ற மேல்நிலை மின் பாதைகள் அகற்றப்பட்டு புதைவட மின் பாதையாக மாற்றப்பட்டது. இதன் மூலம் தேர் நிலையம் வந்தவுடன் உடனடியாக மின் விநியோகம் வழங்க ஏதுவாகும். மேற்கண்ட ஆய்வு பணியின் போது திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்

அகிலாண்டேஸ்வரி, திருநெல்வேலி மண்டல செயற்பொறியாளர் (மின்னியல்) பரிமளம், திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட செயற்பொறியாளர் (பொது) வெங்கடேஷ் மணி, திருநெல்வேலி நகர்ப்புற கோட்ட செயற்பொறியாளர் முருகன், உதவி செயற்பொறியாளர் திருநெல்வேலி டவுண் பிரிவு ராஜகோபால், தொழில்நுட்ப வல்லுநர்கள், பணியாளர்கள் உடன் இருந்தனர்.

## திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கும்பாபிஷேகம் நடத்த சிவாச்சாரியார்களுக்கு தாம்பூலம் கொடுத்து அனுமதி



தூத்துக்குடி ஜூன் 28

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வருகிற ஜூலை 7ந்தேதி மகா கும்பாபிஷேக விழா நடக்கிறது. இதையொட்டி பெருந்திட்ட வளாக பணிகளும், பல்வேறு திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ராஜகோபுரம் புதுப்பிக்கும் பணி முழுமையாக முடிவடைந்துள்ளது.

அதேபோல் கோவில் மேல்தளத்தில் உள்ள மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை, பெருமாள், நடராஜர் ஆகிய சுவாமிகளின் கோபுர விமான கலசங்கள் புதுப்பிக்கும் பணியும், தங்க தகடுகள் ஒட்டும் பணியும், கும்பாபிஷேகம் தொடர்பான மற்ற பணிகளும் முடிவடையும் தருவாயில் உள்ளன.

மகா கும்பாபிஷேக விழாவைமுன்னிட்டு யாகசாலை அமைப்பதற்காக ராஜகோபுரத்தின் கீழ் பகுதியில் பூமி பூஜை செய்யப்பட்டு பந்தல்கால் நடப்பட்டது. பின்னர், அந்த இடத்தில் 8 ஆயிரம் சதுர அடியில் பிரமாண்ட யாகசாலை பந்தல் அமைக்கும் பணியும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. யாகசாலை பந்தலில் 76 ஓம குண்டங்கள் அமைக்கப்படுகின்றன.

வருகிற 1ந்தேதி மாலையில் யாகசாலை பூஜைகள் தொடங்கி, 7ந் தேதி அதிகாலை வரை 12 கால யாகசாலை பூஜைகள் நடைபெறும். 7ந்தேதி காலை 6.15 மணிக்கு மேல் 6.50 மணிக்குள் ராஜகோபுர விமான கலசங்கள், சுவாமி மூலவர், சண்முகர், ஜெயந்திநாதர், நடராஜர், குமரவிடங்கபெருமான் மற்றும் பரிவார மூர்த்திகள் விமான கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இதையொட்டி நேற்று மாலையில் மூலவருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. பின்னர் கோவில் உள்பிரகாரத்தில் செப்புக்கொடிமரம் அருகில் உள்ள கல்யாண விநாயகர் சன்னதி முன்பு கோவில் நிர்வாகம் சார்பில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் ஆகியோரிடம் இருந்து பிள்ளையார்பட்டி பிச்சை சிவாச்சாரியார், தூத்துக்குடி செல்வம் பட்டர் மற்றும் திருச்செந்தூர் சிவாச்சாரியார்கள் தாம்பூலம் பெற்று, கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்துவதற்கான அனுமதி பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில், கோவில் உள்துறை கண்காணிப்பாளர்கள் சுபிதா, விஜயலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நில உடைமைகளை ஜீன் 30க்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்: விவசாயிகளுக்கு தூத்துக்குடி கலெக்டர் அழைப்பு



தூத்துக்குடி, ஜூன் 28

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக பிரதமரின் பி.எம்.கிசான் கௌரவ நிதி உதவித் தொகை, மாநிலத்தில் சொட்டுநீர் பாசனக்கருவிகள், வேளாண் உபகரணங்கள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி பங்களிப்புடன் விவசாயிகளுக்கு வழங்கி ஊக்குவித்து வருகிறது.

மத்திய அரசு வழங்கும் பி.எம்.கிசான் கௌரவ நிதி உதவித் தொகை விவசாயி அல்லாதவருக்கு சென்றுவிடக் கூடாது என இணைய வழியில் மத்திய அரசு பி.எம்.கிசான் கௌரவ நிதி உதவித் தொகை விவசாயிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கில் நேரடியாகவழங்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பி.எம்.கிசான் திட்டத்தில் ஊக்கத் தொகை பெறும் 48,762 விவசாயிகளில், 37,211 பேர் மட்டுமே தற்போது வரை அடையாள அட்டை எண் பெறுவதற்காக பதிவு செய்துள்ளனர். மீதமுள்ள 11,551 விவசாயிகள் உடனடியாக பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் நில உடைமைகளை பதிவேற்றம் செய்யாத மற்றும் தனி அடையாள எண் பெறாத விவசாயிகளுக்கு பி.எம். கிசான் திட்டத்தில் அடுத்த தவணைநிதிநிறுத்தப்படும்.

மேலும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 10,79,481 பட்டாக்களில் இது வரை 75,156 பட்டாக்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 10,04,325 பட்டாக்களை பதிவு செய்யும் பொருட்டு விவசாயிகள் தங்கள் நிலம் தொடர்பான ஆவணங்களான பட்டா அல்லது கூட்டு பட்டா, ஆதார் அட்டையோடு இணைக்கப்பட்ட மொபைல் எண்ணுடன், அரசு கள அலுவலர்களையோ அல்லது பொது சேவை மையங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் அதன் தொடர்புடைய அனைத்து துறைகளில் செயல்படுத்தப்படும் அரசு மானிய திட்டங்கள் அனைத்தும் இனிவரும் காலங்களில் விவசாயிகள் தங்கள் நில உடமைகளை பதிவு செய்து அடையாள எண் பெற்றால் மட்டுமே பயன்பெற முடியும்.

எனவே விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர்நலத் துறை அலுவலர்களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள்,

அருகிலுள்ள பொது சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி உடனடியாக இத்திட்டத்தில் பதிவு செய்து பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஆனித்தேரோட்டம்: நெல்லையப்பர் கோவில் தேர்களுக்கு சாரம் அமைக்கும் பணி மும்முரம்



திருநெல்வேலி ஜூன் 28

நெல்லை டவுன் நெல்லையப்பர் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் ஆனி பெருந் திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப் படுகிறது. இந்த ஆண்டு ஆனி பெருந்திருவிழா வருகிற 30ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

9வது நாளான வருகிற 8ந்தேதி சிகர நிகழ்ச்சியான ஆனி பெருந்திருவிழா தேரோட்டம் நடைபெறுகிறது. இதில் சுவாமி, அம்பாள், விநாயகர், முருகர், சண்டிகேஸ்வரர் உள்ளிட்ட 5 தேர்கள் பக்தர்களால் வடம் பிடித்து இழுக்கப்பட்டு 4 ரத வீதிகளிலும் வலம் வரும்.

ஆனிப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, பல்வேறு முன்னேற்பாடு பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. சுவாமி, அம்பாள், விநாயகர், சண்டிகேஸ்வரர் உள்ளிட்ட 5 தேர்களையும் தயார்படுத்தும் பணி கடந்த ஒரு வாரமாக நடந்து வருகிறது. ரதவீதிகளில் நிறுத்தப்பட்டு இருந்த தேர்களை தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சி அடித்து சுத்தம் செய்தனர்.

தொடர்ந்து தேர்களில் அலங்காரம் செய்வதற்காக, அவற்றைச் சுற்றிலும் கம்புகளால் சாரம் அமைக்கும் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. இந்த பணிகள் முடிந்த பின்னர் தேரில் பிரம்மா குதிரைகளை செலுத்துவது போன்ற பல்வேறு மரச்சிற்பங்கள் பொருத்தப்படுகின்றன.

## பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு: பொது மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



கோவை, ஜூன் 28

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவார பகுதியில் பில்லூர் அணை உள்ளது. இது 100 அடி கொள்ளளவு கொண்டது. இந்த நிலையில் நீலகிரி மாவட்டம் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு அணையின் நீர் மட்டம் 92 அடியாக இருந்தது.

இரவு 7.30 மணிக்கு வினாடிக்கு 7,120 கன அடி நீர் வந்தது. நீர்மட்டம் 97 அடியை எட்டியது.

இதனால் பாதுகாப்பு கருதி அணையின் 4 மதகுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 7,120 கன அடி உபரி நீர் வெளியேற்றப் பட்டது.


தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்ததால் 6 மணிக்கு வினாடிக்கு 13,140 கன அடி நீர் வந்தது. நீர்மட்டத்தை 97 அடியில் ஒரே சீராக வைத்திருக்க வினாடிக்கு 13,140 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக மாவட்ட நிர்வாகம் சார்பில் பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பில்லூர் அணை செயற்பொறியாளர் மேற்பார்வையில் மின்சார வாரிய அலுவலர்கள் 24 மணி நேரமும் நீர்வரத்து, நீர்மட்டம், நீர் வெளியேற்றம் ஆகியவற்றை கண்காணித்து வருகின்றனர்.

மேலும் பவானி ஆற்றின் கரையோர பகுதியில் தாழ்வான இடங்களில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்காக தமிழக வியாபாரிகள் சம்மேளன மண்டபம், சிவசக்தி மண்டபம், காதர் மகான் உஸ்மானியா மண்டபம், வெள்ளிபாளையம் அரசு தொடக்கப்பள்ளி ஆகிய இடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

## காத்திருந்தும் கைபிடிக்க யாரும் இல்லை... திருமணமாகாத ஏக்கத்தில் இளம்பெண் எடுத்த விபரீத முடிவு



திருப்பூர், ஜூன் 28

உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் ராஜ்மதி (வயது25). இவர் கடந்த சில வருடங்களாக திருப்பூரில் உள்ள வித்யாலயம் அடுத்த பாரதி நகரில் வசித்துக் கொண்டு பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவருக்கு திருமண ஏற்பாடுகள் நடந்தன. இதையடுத்து பெண் பார்க்க அவ்வப்போது மாப்பிள்ளை வீட்டார் வந்தனர்.

மாப்பிள்ளை வீட்டார் வரும்போது ராஜ்மதி தன்னை அலங்கரித்து காத்திருப்பார். அவர்களும் பெண்ணை பார்த்து செல்வார்கள். அதன்பின்னர் சம்மதம் சொல்வார்கள்என வழிமேல் விழி வைத்து ராஜ்மதி காத்திருந்தார். காத்திருந்து, காத்திருந்து காலம் கடந்ததே தவிர கைபிடிக்க யாரும் முன்வரவில்லை. இப்படி ஒவ்வொரு முறையும் பெண் பார்க்க வருவதும், பின்னர் மாப்பிள்ளையின் பதிலுக்காக ராஜ்மதி காத்திருப்பதும் வாடிக்கையாகி போனது. தன் வயது உள்ளபெண்கள்குழந்தை கணவருடன் செல்வது ராஜ்மதிக்கு ஏக்கத்தை ஏற்படுத்தியது. தன்னையும் பலபேர் பெண் பார்த்துச் சென்றும் ஒருவர் கூட வாழ்க்கை துணையாக வர மறுக்கிறார்களே என மன வேதனையில் இருந்துள்ளார். இந்த நிலையில் ராஜ்மதி நேற்று வீட்டில் யாரும் இல்லாத போது தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவலறிந்த மத்திய போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைது - ராமநாதபுரத்தில் போலீஸ் நடவடிக்கை



ராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முதலூர் ஆற்றுப்படுகையில் சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபட்ட வீராச்சாமி மற்றும் பாண்டி ஆகிய இருவர் கைது சத்திரக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ராஜீவ் காந்தி அவர்கள் தலைமையில்போலீசார் சட்டவிரோத மணல் கடத்தலில் ரோந்து செய்து வந்த போதுமுதலூர் ஆற்றுப்படையில் சந்தேகிக்கிடமாக வந்த லாரியை நிறுத்தி சோதனை செய்த போது அதில் சட்டவிரோத ஆற்று மணல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பிறகு இருவரையும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப் பட்டனர்.

## 5 ஆண்டுகளுக்கு பிறகு தென்மேற்கு பருவமழையில் நிரம்பிய அடவிநயினார் அணை



தென்காசிஜூன் 28

5 ஆண்டுகளுக்கு பிறகு தென்மேற்கு பருவமழையில் அடவிநயினார் அணை நிரம்பியது. இதனால் கரையோர மக்களுக்கு வெள்ளி அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. தென்மேற்கு பருமவழை தீவிரமடைந்த நிலையில் நெல்லை, தென்காசி மாவட்டங்களில்பரவலாகமழை பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்த தொடர் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 132.95 அடியாக இருந்தது. நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக நேற்று அணையின் நீர்மட்டம் 134.25 அடியாகஉயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 790 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பாசனத்திற்காக 1500 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 135.82 அடியாக இருந்தது. அணையின் நீர் மட்டம் 3 அடிக்கும் அதிகமாக உயர்ந்து 138.94 அடியாக உள்ளது. தென்காசி மாவட்டத்தில் பிரதான அணைகளில் ஒன்றான அணையான மேக்கரை அடவிநயினார் அணை ஒரே நாளில் 7 அடிக்கும் அதிகமாக உயர்ந்து தனது முழு கொள்ளளவான 132.22 அடியை எட்டி நிரம்பி வழிந்தது. தென்மேற்கு பருவமழையில் கார்பருவ சாகுபடிக்கு 5 ஆண்டுகளுக்கு பிறகு அடவிநயினார் அணை நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அணை நிரம்பி வழிந்ததை ஏராளமானவர்கள் கண்டு ரசித்தனர். இதனால் அனுமன்நதி கரையோரம் வசிக்கும் மக்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. தொடர் மழை காரணமாக மணிமுத்தாறு அணையில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதேபோல் களக்காடு வனப்பகுதியில் உள்ள சுற்றுலா தலமான தலையணையிலும் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் அங்கும் சுற்றுலா பயணிகள் குளிக்க விதிக்கப்பட்ட தடை நீட்டிக்கப்பட்டு உள்ளது.

## திருநெல்வேலியை போதைப்பொருள் இல்லாத மாவட்டமாக மாற்ற விழிப்புணர்வு பேரணி



திருநெல்வேலி ஜூன் 28

திருநெல்வேலி மாவட்டத்தில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவின்படி, மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் மற்றும் பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கும் போதை தடுப்பு நடவடிக்கைகள்குறித்துவிழிப்புணர்வு பேரணி மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காவல்நிலையங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு உட்கோட்ட டி.எஸ்.பி.க்கள் தலைமையில், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் முன்னிலையில் போதை தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. காவல்துறையினர் பள்ளி, கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களை நேரில் சந்தித்து போதைப் பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் போதைப்பொருள் இல்லாத மாவட்டமாக திருநெல்வேலி மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் போதைப் பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது. பின்பு மாணவ மாணவிகள் போதை தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பதாதைகள் ஏந்தி நகரின் முக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு பேரணி நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# தூத்துக்குடியில் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணி



தூத்துக்குடி ஜூன் 28 சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தூத்துக் குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் தலைமையில் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் வைத்து மாணவ மாணவிகளுடன் போதைப் பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் தொடக்க நிகழ்வாக மாவட்ட எஸ்.பி. தலைமையில் காவல் துறையினர், கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் மாவட்ட எஸ்.பி., மாணவ மாணவிகளிடம் போதை பொருட்களால் ஏற்படும் அபாயம் குறித்தும் போதைப் பொருட்களைதடுப்பதுகுறித்தும், இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகாமல் கல்வியை சிறப்பாக கற்று எதிர்காலத்தில் சமுதாயத்தில் சிறந்தவர்களாக திகழ வேண்டும் என்று எடுத்துரைத்து போதைப் பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனை தொடர்ந்து காமராஜ்கல்லூரிமாணவ மாணவிகள் சுமார் 450 பேர் மற்றும் காவல்துறையினர் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட எஸ்.பி. கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த பேரணி காமராஜ் கல்லூரி முதல் தூத்துக்குடி பீங்கான் ஆபீஸ் ஜங்ஷன் வரை சென்று நிறைவு பெற்றது. இதில் போதை பொருள் தடுப்பு குறித்த பதாகைகளை ஏந்தி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன், தூத்துக்குடி மதுவிலக்கு அமலாக்க பிரிவு டி.எஸ்.பி. குருவெங்கட்ராஜ் உட்பட காவல்துறையினர் மற்றும் காமராஜ் கல்லூரி முதல்வர் பானுமதி மற்றும் பேராசிரியர்கள், கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்பு



திருநெல்வேலி ஜூன் 28 சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் எஸ்.பி. சிலம்பரசன் தலைமையில் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் காவல்துறையினர் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அப்போது அவர்கள் அனைவரும், "போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாகஅறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்கு உள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரானதடுப்புநடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்" என்று கூறி உறுதிமொழி எடுத்தனர்.

# 30ம் தேதி சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டம்



சென்னை, ஜூன் 28 சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

மேயர் ஆர். பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் 30.06.2025 அன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

வருகின்ற 27.06.2025 அன்று நடைபெறுவதாக இருந்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் தவிர்க்க முடியாத நிர்வாக காரணங்களால், 30.06.2025 அன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு, மேயர் பிரியா தலைமையில் மாநகராட்சி மன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீங்க உங்க மொழியில பேசுங்க, நாங்க எங்க மொழியில பேசுறோம்: அமித்ஷாவுக்கு கனிமொழி பதில்



சென்னை ஜூன் 28 மத்திய அரசின் அலுவல் மொழித் துறையின் பொன்விழா கொண்டாட்டத்தில் பேசிய மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, "அனைத்து மாநில அரசுகளும் உள்ளூர் மொழியில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்வியை வழங்க முயற்சி எடுக்க வேண்டும். நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு உதவும்.

இந்தி எந்த இந்திய மொழியையும் எதிர்க்க வில்லை. மாறாக, அது அனைத்து இந்திய மொழிகளுக்கும் நண்பன். எந்த மொழிக்கும் எதிர்ப்பு இல்லை. எந்த வெளிநாட்டு மொழிக்கும் எதிர்ப்பு இருக்கக்கூடாது. ஆனால் ஒருவரின் சொந்த மொழியைப் போற்றுவதற்கான உந்துதல் இருக்க வேண்டும். ஒருவரின் சொந்த மொழியைப் பேசுவதற்கான உந்துதல் இருக்க வேண்டும், ஒருவரின் சொந்த மொழியில் சிந்திக்கும் உந்துதல் இருக்க வேண்டும்" என்று கூறினார்.

இந்த நிலையில் மத்திய மந்திரி அமித்ஷாவின் பேச்சுக்கு பதிலளித்துள்ள கனிமொழி எம்.பி. "அதையே தான் நாங்களும் சொல்கிறோம். நீங்க உங்க மொழியில பேசுங்க, நாங்க எங்க மொழியில பேசுறோம்" என்று கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சரியாக சொன்னீங்க. அதையே தான் நாங்களும் சொல்கிறோம். நீங்க உங்க மொழியில பேசுங்க, நாங்க எங்க மொழியில பேசுறோம். தனியா ராஜ்பாஷா எல்லாம் தேவை இல்லை. அந்த பெயரை இந்திய மொழிகள் வளர்ச்சி துறைன்னு மாத்திடலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க.வை விழுங்குவதுதான் பா.ஜ.க.வின் திட்டம் திருமாவளவன்



சென்னை ஜூன் 28 திருச்சி செல்வதற்காக சென்னை விமான நிலையத்துக்கு வந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அ.தி.மு.க. கூட்டணியை பொறுத்தவரை பா.ஜ.க. தான் வழிநடத்துகிறது. அ.தி.மு.க. அமைதியாக இருக்கிறது. தமிழ்நாட்டில் பா.ஜ.க. நிலை கொள்வதை எப்படி அனுமதிக்க முடியும். இங்கு சமூக நீதிக்கான குரல் கடந்த அரை நூற்றாண்டாக வலுவாக ஒலித்து கொண்டிருக்கிறது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற தலைவர்கள் வந்த திராவிட கட்சியில் இருந்து சென்றவர்தான் பா.ஜ.க.வின் தலைவர் நயினார் நாகேந்திரன். தெரிந்துதான் அவரை தலைவர் ஆக்கி இருக்கிறார்கள். அ.தி.மு.க.வை விழுங்குவது தான் பா.ஜ.க.வின் உடனடி திட்டம். இதை எப்போது அ.தி.மு.க. உணரப்போகிறது? இப்போதும்65எம்.எல்.ஏ.க்களை கொண்ட கட்சி, ஆண்ட கட்சி அது. முருக பக்தர்கள் மாநாட்டில் பெரியாரையும், அண்ணாவை யும் கொச்சைப்படுத்திய பா.ஜ.க. சங்பரிவார் அமைப்புகளோடு அ.தி.மு.க. பயணிப்பது தற்கொலைக்கு சமமானது.

பா.ம.க., தி.மு.க.வுடன் கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நீங்கள் தான் கூறுகிறீர்கள். இது ஒரு யூகமான கேள்வி. அது நடந்தால் பார்க்கலாம். தி.மு.க. கூட்டணியில் 2011ம் ஆண்டு தேர்தலில் பா.ம.க.வும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இருந்திருக்கிறது. அதன் பிறகு பா.ம.க.வின் நடவடிக்கைகளால்தான் நாங்கள் பல அவதூறுகளுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பெரியார் குறித்து அவதூறாக வீடியோ வெளியிட்டதற்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். பெரியாரை பற்றி அவதூறு பரப்பிய பிறகும் அவர் அதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை என்றால் உண்மையாகவே பெரியாரை ஏற்றுக்கொண்டாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாடு, புதுச்சேரி கடலோர பகுதிகளில் 2 நாட்கள் நடைபெற்ற பாதுகாப்பு பயிற்சி



சென்னை, ஜூன் 28 'சாகர் கவச் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) 01/2025'எனும் கடலோர பாதுகாப்புப் பயிற்சி, இந்திய கடலோர காவல் படையினால், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடலோர பகுதிகளில் பயங்கரவாத தாக்குதல்களுக்கு எதிராக பாதுகாப்புப் படைகள் மற்றும் உளவு அமைப்புகளின் தயார்நிலை மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்யும் நோக்கில் 25.06.2025 மற்றும் 26.06.2025 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியில், தமிழ்நாடு காவல் துறையின் கடலோர பாதுகாப்பு பிரிவு, இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல் படை, மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை (CISF), தேசிய பாதுகாப்புப் படை (NSG), மீன்வளத் துறை,(Lighthouse Authorities), உளவுத்துறைகள், கடல் வாணிபத் துறை, குடிவரவு, சுங்கத் துறை, வனத்துறை, ONGCமற்றும் அனைத்து முக்கியமான மற்றும் சிறிய துறைமுகங்களும் பங்கேற்றன. தமிழ்நாடு முழு கடலோரப் பகுதியில் இந்த பயிற்சி வெற்றிகரமாக நடைபெற, இத்தனை அமைப்புகளில் இருந்து சுமார் 10,000 பேர், அதில் தமிழ்நாடு காவல்துறையில் இருந்து மட்டும் 9,226 போலீசாரும் ஈடுபட்டனர்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டவர்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டனர். 'ரெட் போர்ஸ்' (Red Force) எனும் குழுவினர் கடல் வழியாகநாடு புகுந்து முக்கிய சொத்துகள் மற்றும் அபாயமான இடங்கள், மற்றும் கடலோர மக்கள் கூடும் சுற்றுலா பகுதிகளை நோக்கி நுழைய திட்டமிட்டனர். மற்றொரு குழு 'புளூ போர்ஸ்' (Blue Force) கடலில் மற்றும் நிலத்தில் அவர்களைதடுக்க வேண்டிய பணியில் ஈடுபட்டனர்.

இந்திய கடலோர காவல்படை, இந்திய கடற்படை மற்றும் சுங்கத்துறைகப்பல்கள், பறக்கும் விமானங்கள், தேவகமான துரிதப்படகுகள், ஹெலிகாப்டர்கள் மற்றும் ஹோவர்கிராப்ட் ஆகியவற்றை நியமித்தன. கடலோர பாதுகாப்பு பிரிவு, திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி வரையிலான தமிழ்நாடு கடலோரத்தில் 19 வேகதுரித படகுகள் மற்றும் 7 வாடகை படகுகளை இயக்கியது.

மொத்தத்தில், இந்த பயிற்சி எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்தது. மாநிலம் முழுவதும் 35 இடங்களில் ஊடுருவும் முயற்சிகள் செய்த போது, அவை அனைத்தும் தடுக்கப்பட்டு 132 ஊடுருவிகள் மற்றும் (Red Force) 'ரெட் போர்ஸ்' பயன்படுத்திய 8 படகுகள் பிடிக்கப்பட்டன.

மேலும் 26.06.2025 அன்றுகடல் கடத்தல் சூழ்நிலை உருவாக்கும் பயிற்சி நடத்தப்பட்டது. இதில், காலை 7.00 மணியளவில், காமராஜர் துறைமுக எல்லையில் 'M.V. RIPLEYPRIDE' எனும் வாணிபக்கப்பலை 'ரெட் போர்ஸ்' (Red Force) குழுவைச் சேர்ந்த மூன்று பயங்கரவாதிகள் கப்பலில் நுழைந்து, கப்பல் மாஸ்டர்உட்பட 23 பணியாளர்களைபிடித்து பணயகைதிகளாக பிடித்துகொண்டனர்.

இதையொட்டி, சஞ்சய் குமார்IPS, கூடுதல் காவல் துறை இயக்குநர், கடலோர பாதுகாப்புக் குழுமம் மற்றும் தமிழ்நாடு மாநில கடல் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளரின் தலைமையில், எண்ணூர் காமராஜர் துறைமுகத்திலுள்ள சிக்னல் நிலையத்தில் 'விபத்து மேலாண்மை குழு' அமைக்கப்பட்டது. மாநில காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் உள்துறை அரசு அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழ், மாநில கடலோர பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் இச்சூழ்நிலையை கண்காணித்து, பிற அமைப்புகளை வழிநடத்தினார்.

பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியடைந்ததால், காலை 10:12 மணி முதல் 11:50 மணி வரை (storming) நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதில் NSG Hub சென்னையிலிருந்து 40 NSG கமாண்டோக்கள் கொண்ட 27 NSG குழு, இந்திய கடலோர காவல் படையின் கப்பலிலும், துறைமுகத்தின் TUG படகிலும், கடலோர பாதுகாப்பு குழுவின் விரைவு பதிலளிப்புப் பிரிவு மற்றும் CISF உடன் இணைந்து, மாநில அரசின் ஒப்புதலுடன் பங்கேற்றனர்.

இந்த நடவடிக்கையில், 3 பயங்கரவாதிகள் செயல் இழக்கப்பட்டும் ஒருவர் கைது செய்யப்பட்டும் ஆவடி காவல் ஆணையரக போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலும், கடத்தப்பட்ட 23 பணியாளர்களும் காயமின்றி மீட்கப்பட்டனர். இக்கப்பல் பின்னர் காமராஜர் துறைமுக அதிகாரிகளால் வெளியிறக்கத்தில் (outer anchorage) தடுத்து வைக்கப்பட்டது. கடல் கடத்தல் சூழ்நிலை வெற்றிகரமாகமுடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இப்பயிற்சி, அவசர நிலை ஏற்படும் நேரத்தில் தயார்நிறன் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஒருங்கிணைப்புத் திறனை நிலைநாட்டும் வகையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

# கொலை முயற்சி வழக்கில் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது




திருநெல்வேலி ஜூன் 28 திருநெல்வேலி மாநகரப் பகுதியில் கொலை முயற்சி வழக்குகளில் சம்பந்தப்பட்ட பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் திருநெல்வேலி தச்சநல்லூர், தேனீர்குளம் தெற்கு நியூ காலனியை சேர்ந்த சீனிவாசன் மகன் நம்பிராஜன் (வயது 32) என்பவர் ஈடுபட்டு வந்துள்ளார். இதன் காரணமாக அவர் திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை கமிஷனர் (மேற்கு) பிரசண்ணகுமார், போலீஸ் உதவி கமிஷனர் (ஜங்ஷன் சரகம்) தர்ஷிகா நடராஜன், தச்சநல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மகேஷ் குமார் ஆகியோரின் பரிந்துரையின்பேரில் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ்ஹாதிமணி உத்தரவுப்படி இன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.

இதேபோல் திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதியில் கொலை முயற்சி, பொதுமக்களை அச்சுறுத்தல் வழக்குகளில் சம்பந்தப்பட்டு,

பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, திம்மராஜபுரம், வெங்கடேஸ்வரா தெருவை சேர்ந்த ராமர் மகன் ஆதிநாராயணன்(23) என்பவர் ஈடுபட்டு வந்துள்ளார். இதன் காரணமாக அவர் திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை கமிஷனர் (கிழக்கு) வினோத் சாந்தாராம், போலீஸ் உதவி கமிஷனர் (பாளையங்கோட்டைசரகம்) சுரேஷ், பாளையங்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் காசிப்பாண்டியன் ஆகியோரின் பரிந்துரையின் பேரில், திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ்ஹாதிமணி உத்தரவுப்படி இன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.

# வணக்கம் டா மாப்ள... கூமாபட்டியிலிருந்து... விருதுநகர் முன்னாள் கலெக்டர் பதிவு



சென்னை, ஜூன் 28 இணையதளத்தில் அடிக்கடி ஏதாவது ஒரு விஷயம் டிரெண்ட் ஆகிவிடுவதை பார்க்க முடிகிறது. அந்த வகையில் கடந்த சில நாட்களாக இன்ஸ்டாகிராம், ட்விட்டர் என சமூக வலைத்தளங்களை திறந்தாலே... ஏங்க கூமாபட்டிக்கு வாங்க என்று பரவும் வீடியோக்களைதான்பார்க்கமுடிகிறது. இதனால், ஒரே நாளில் அகில உலக பேமஸ் ஆகிவிட்டது கூமாபட்டி.

இதனால், கூமாபட்டி என்ற கிராமம் இணையதேடுதலில் முன்னிலையில் இருந்து வருகிறது. இதனால், அந்த கூமாபட்டி கிராமம் தமிழக அளவில் மிகவும் பேசும் பொருளாகவும் மாறி உள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்பு என்ற ஊருக்கு அருகில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் தான் இந்த கூமாபட்டி கிராமம் அமைந்துள்ளது.

இந்த நிலையில், கூமாபட்டி குறித்துவிருதுநகர் முன்னாள் கலெக்டர் ஜெயசீலன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

உலகப் புகழ் கூமாபட்டியிலிருந்து... நேற்றிலிருந்து நண்பர்கள் அழைத்து என்னடா விருதுநகர் கலெக்டராக இருந்து இப்பவும் இன்டர்நேஷனல் Exotic Destination கூமாபட்டிய எங்களிடம் காட்டாமல் விட்டு விட்டாய் என்று கோபித்துக் கொண்டார்கள். எனக்கே கொஞ்சம் அதிர்ச்சியாகதான் இருக்கு பொறுங்க நாளைக்கு சும்மாதான் இருப்பேன். போய் பார்த்து போட்டோ எடுத்து போடுறேன் என்று சொன்னேன்..

கூமாபட்டி, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஒட்டி அமைந்துள்ள அழகான ஊர். பிளவக்கல் கோவிலாறு அணைகளுக்கு அருகில், இரண்டு மிகப்பெரிய கண்மாய்களையும் கொண்ட ஆயக்கட்டுகள் நிறைந்த ஊர். மழைக்காலத்தில் கண்மாய்கள் நிரம்பி, கடல் போல் நிறைந்து, இயற்கை எழில் சூழ மிகுந்த ரம்மியமாய் காட்சியளிக்கும்.

அந்த வைரல் வீடியோவில், தலைவன் சொன்னதை போல் காதல் தோல்விக்கு தீர்த்தமாகவோ, இல்லை காதல் செட்டாவதற்கு தைலமாகவோ இருக்குமா என்பது குறித்து எந்த ஆவணக் குறிப்புகளும் இல்லை. தலைவனின் மற்ற தகவல்கள் 'ரீல்'ஸ்காக மட்டுமே; மற்றபடி, இது போன்ற கிராமப்புற பகுதிகளில் இயற்கை எழில் சூழ்ந்த இடங்களில் கிராம சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும், அழுத்தமான நகர்ப்புற வாழ்வியலிலிருந்துஇளைப்பாறவும் 100 சதவீத கியாரண்டி உள்ளிடும்.

எதிர்காலத்தில் இது கிராமச் சுற்றுலா வசதிகளுடன் மேம்படும் அடையும் என எதிர்பார்க்கலாம். கூமாபட்டி கண்மாயின் இன்றைய புகைப்படங்கள், கடைசி படம் கடந்த ஆண்டு நீர் நிரம்பியிருந்தபோது நான் எடுத்தது! மிகவும் ரம்மியமான பகுதி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
28.6.2025

# திண்டுக்கல் பூட்டு இரும்பு பொருட்கள் மற்றும் அறைகலன்கள் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கத்தில் கலெக்டர் ஆய்வு



திண்டுக்கல், ஜூன் 28

திண்டுக்கல் பூட்டு இரும்பு பொருட்கள் மற்றும் அறைகலன்கள் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கத்தில் மாவட்ட கலெக்டர் செ.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பூட்டு தயாரிப்பு முறைகளை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

திண்டுக்கல் பூட்டு இரும்பு பொருட்கள் மற்றும் அறைகலன்கள் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நல்ல தரமான பூட்டுகள் செய்து வரும் ஒரு முன்னோடி தொழிற்கூட்டுறவு நிறுவனம். தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத் துறையின் திண்டுக்கல் மாவட்ட தொழில் மையம் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் இந்தச் சங்கம், தமிழ்நாட்டிலேயே தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இந்த தொழிற்கூட்டுறவு சங்கம், அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், ரயில்வே போன்ற அனைத்து நிறுவனங்களுக்கும் தரமான

பூட்டுக்களை விநியோகித்து தமிழ்நாடு அரசு மற்றும் பிற வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்று நல்ல லாபகரமான முறையில் இயங்கி வருகிறது. இச்சங்கம் மூலம் 75 எம் எம் பேட்லாக் 7 லீவர்ஸ் (இரும்பு மற்றும் பித்தளை), 63 எம் எம் பேட்லாக் 6 லீவர்ஸ், 70 எம்எம் காவலன் 8 லீவர்ஸ், 55 எம் எம் காவலன் 7 லீவர்ஸ், 55 எம் எம் சென்டினல் 7 லீவர்ஸ், லண்டன் பூட்டுக்கள், ரயில்வே பூட்டுக்கள் தனித்துவம் மிக்கவை, கதவு பூட்டுக்கள் (டோர் லாக்) என பல்வேறு வகையான பூட்டுகள் தயாரித்து சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் புவிசார் குறியீடு பெற்ற இப்பூட்டுகள் தற்போது இணையதள வாயிலாக விற்பனை செய்யப்படுகிறது.

தொழிற்கூட்டுறவுத் துறையில் பூட்டு உற்பத்தி செய்யும் பாரம்பரிய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் பூட்டு உற்பத்தி செய்ய தேவையான அனைத்து அடிப்படை இயந்திரங்கள், தளவாடங்கள், பணிமனை ஏற்படுத்தித் தந்துள்ளதோடு, உயர்நிலையில் நவீன இயந்திரங்களுடன் பூட்டு உற்பத்தி செய்யும் கோத்ரெஜ் நிறுவனம் மற்றும் கீழ்நிலையில் குறைந்த விலையில் பூட்டுக்களை வழங்கும் அலிகார் நிறுவனங்கள் ஆகியவை விடுக்கும் தொழில் ரீதியான மற்றும் விற்பனை ரீதியான அறைகூவல்களை எதிர்கொண்டு வெற்றி பெற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வருகிறது.

திண்டுக்கல் பூட்டிற்கென ஒரு பெயரும், புராதனமும் மாற்றப்படாத அமைப்பும் உள்ளது. எனவே, இதனை, முழு இயந்திரமாக்கலில் பராமரிக்கப்பட்டு வந்த கைவினைஞர்களின் திறன் மங்கச் செய்யக்கூடாது என்ற கருத்துரைகளை ஏற்றும் கைவினைஞர்களின் பணியின் முழுமையாக மாற்றாத ஓரளவு நவீன மயமாக்கல் திட்டத்திற்கு தயார் செய்யப்பட்டு வருகிறது. சொந்த நிதி ஆதாரத்துடன் செயல்பட்டு, தரமான பூட்டுகளை தயாரித்து வரும் இச்சங்கத்திற்கு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான பூட்டுக்களுக்கு இச்சங்கத்தை திண்டுக்கல் பூட்டு இரும்பு பொருட்கள் மற்றும் அறைகலன்கள் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிட்., இண்ட் எண்.150, 17ஏ, சௌந்திரராஜா மில்ஸ் ரோடு, திண்டுக்கல் 624003 என்ற முகவரியில் நேரிலோ அல்லது கைப்பேசி எண் 9629808072, 9500490503 வாயிலாகவோ தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இதன்மூலம் இச்சங்கம் மேலும் சிறப்பாக செயல்பட்டு உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திட ஏதுவாக அமையும், என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

# போதைப் பொருள்கள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான்: 1,829 மாணவ மாணவர்கள் பங்கேற்பு




திருவள்ளூர், ஜூன் 28

ஆவடி காவல் ஆணையரகம் சார்பில் போதைப்பொருள்கள் மற்றும் புகையிலை ஒழிப்பிற்கான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம் நேற்று (ஜூன் 26) நடைபெற்றது. இதில் 58 கல்லூரிகளைச் சேர்ந்த 1,215 மாணவர்கள் ஆண்கள் பிரிவிலும், 624 மாணவிகள் பெண்கள் பிரிவிலும் மொத்தம் 1,839 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இந்த மாரத்தான் ஆவடி அருகே திருமுல்லைவாயல் காவலர் திருமண மண்டபத்தில் தொடங்கி, ஆவடி பேருந்து நிலையம் வரை சென்று, மீண்டும் புறப்பட்ட இடத்தில் முடியும் வகையில் 5 கி.மீ தூரம் மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. இந்த போட்டியை காவல் ஆணையர் கி.சங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாவது வந்த முத்தமிழ் செல்வன் என்பவருக்கு ரூ.5,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும், 2ஆவது வந்த விக்கி என்பவருக்கு ரூ.4,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும், 3ஆவது வந்த விஷால் என்பவருக்கு ரூ.3,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும், 4 முதல் 10 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு தலா ரூ.2,000 ரொக்கப் பரிசுடன் சான்றிதழ்களும், 11 முதல் 35 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு தலா ரூ.1,000/ ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது. இதே போல பெண்கள் பிரிவில் முதலாவது வந்த ஐஸ்வர்யா என்பவருக்கு ரூ.5,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும், 2ஆவது வந்த விஷாலி என்பருக்கு ரூ.4,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும், 3ஆவது வந்த ஷாலு என்பவருக்கு ரூ.3,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும், 4 முதல் 10 இடங்களை பிடித்த மாணவிகளுக்கு தலா ரூ. 2,000/ ரொக்கப்பரிசுடன் சான்றிதழ்களும், 11 முதல் 25 இடங்களைப் பிடித்த மாணவியர்களுக்கு தலா ரூ.1,000/ ரொக்கப்பரிசுடன் சான்றிதழ்களும், சிறப்பு பரிசாக மாற்றுத்திறனாளி மாணவி லட்சுமி பிரியா என்பவருக்கு ரூ.2,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது. நிகழ்வில் கூடுதல் ஆணையர் கே.பாவானீஸ்வரி, துணை ஆணையர்கள் ஜமான் ஜமால், பாலாஜி மற்றும் உதவி ஆணையர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (28.6.2025)

மேஷம்: சுகாதாரத்திற்கு சிறந்த நாள். திடீர் பயணங்கள் நடத்த நேரிடும். பண வரவு நன்மை தரும்.

ரிஷபம்: பண மற்றும் குடும்பத்தில் அமைதி இருக்கும். நல்ல உறவுகள் உருவாகும்.

மிதுனம்: தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகலாம். குடும்பத்தில் சிறிது சிக்கல்கள் இருந்தாலும், சமாதானம் அடைவீர்கள்.

கடகம்: மனதிற்கு அமைதி கிடைக்கும். புதிய முயற்சிகள் மற்றும் தொழிலில் சீரான வளர்ச்சி உள்ளது.

சிம்மம்: நாளை உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் நல்ல நேரம். பண விஷயங்களில் நிதி பலன் கிடைக்கும்.

கன்னி: குடும்பத்தின் ஆறுதல் கிடைக்கும். ஒத்துழைப்பு மற்றும் நன்மைகள் கிடைக்கும்.

துலாம்: நிதி நிலைமை மேம்படும். தொழில்முனைவோர்களுக்கு புதிய வாய்ப்புகள்.

விருச்சிகம்: உங்களின் பணி மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றம். ஆதரவு கிடைக்கும்.

தனுசு: உங்களது வாழ்க்கையில் புதிய பரிமாணங்கள் தோன்றும். பணத்தில் புதிய வாய்ப்புகள் கிட்டும்.

மகரம்: பணத்தில் சிந்தனையை மாற்றிக் கொண்டு பெரிய முன்னேற்றம் கிடைக்கும். குடும்பத்தில் நல்ல காலம்.

கும்பம்: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள். உடல்நல பராமரிப்பு செய்ய வேண்டும்.

மீனம்: இந்த நாள் அமைதியானது. தொழிலில் புதிய முயற்சிகளைத் தொடங்க முடியும்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் கஞ்சனூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பள்ளியின் தலைமை ஆசிரியர் இராஜாராமன் முன்னிலையில் பல்வேறு போதை ஒழிப்பு விழிப்புணர்வு நடைபெற்றது இதனைத் தொடர்ந்து பேச்சுபோட்டி, நாடகங்கள் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றதுஇந்நிகழ்ச்சியில்சிறப்பு விருந்தினராக கஞ்சனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விஸ்வநாதன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி மாணவர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கிஊக்கப்படுத்தினார் நிகழ்ச்சியின் சிறப்பு ஒருங்கிணைப்பளர் ப.ஜெயராணி மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும்இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

# ஹேமா கமிட்டி சார்ந்த வழக்குகள் முடித்துவைப்பு

சில ஆண்டுகளுக்கு முன்பு மலையாள நடிகர் திலீப், நடிகை ஒருவரை கடத்தி பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாக வழக்கு தொடரப்பட்ட பிறகு நடிகைகளுக்காக, சினிமாவிலுள்ள பெண்களுக்கான கூட்டமைப்பு என்ற ஒரு அமைப்பு தொடங்கப்பட்டது. இதில், நடிகைகள் ரேவதி, பார்வதி, ரம்யா நம்பீசன், மஞ்சு வாரியர், படத்தொகுப்பாளர் பீனா, இயக்குனர் அஞ்சலிமேனன் உள்பட முக்கியமானோர் இடம்பெற்றிருந்தனர்.

அவர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில்தான், கேரள அரசாங்கம் 2017ல் மலையாள சினிமாவில் நடக்கும் பாலியல் சுரண்டல்களை ஆராய ஓய்வுபெற்ற கேரள ஐகோர்ட்டு நீதிபதி ஹேமா தலைமையில், மூத்த நடிகை சாரதா, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.பி.வல்சலாகுமாரி ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட ஒரு கமிட்டியை அமைத்தது. இந்த கமிட்டி விரிவாக விசாரணை நடத்தி கடந்த 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ந்தேதி தனது அறிக்கையை தாக்கல்செய்தது. இவ்வளவுகாலம்வெளிவராதஅந்தஅறிக்கை, தகவல்உரிமைசட்டத்தின்கீழ்தகவல்கோரப்பட்டதாலும், கோர்ட்டு தீர்ப்பின் எதிரொலியாலும் வெளியுலகத்துக்கு தெரிந்தது.

மலையாள திரையுலகை உலுக்கிய ஹேமா கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் சில வழக்குகள் முடிக்கப்பட்டன. ஹேமா கமிட்டி அறிக்கையின் அடிப்படையில், குழுவின் முன் வாக்குமூலம் அளித்தவர்கள் வழக்கை தொடர ஆர்வம் காட்டாததால், சிறப்புக் குழுவானது பெண் திரைப்பட தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோர் தொடர்ந்த 35 வழக்குகளை முடித்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் யாரும் வாக்குமூலம் அளிக்க முன்வராததால், ஹேமா கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட 35 வழக்குகளும் முடித்துவைக்கப் பட்டதாக சிறப்பு புலனாய்வுக் குழு கேரள உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

சிறப்பு புலனாய்வுக் குழு அளித்த இந்த அறிக்கையின் அடிப்படையில், ஹேமா கமிட்டி அறிக்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் இப்போதைக்கு எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது. திரைப்படத் துறை தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வரும் ஆகஸ்ட் மாதத்தின் முதல் வாரத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்த கேரள மாநில அரசு திட்டமிட்டுள்ளதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டது. இதனையடுத்து இந்த வழக்கின் விசாரணையை ஆகஸ்ட் 13ம் தேதிக்கு தள்ளி வைத்து கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# அர்ஜூன் தாஸின் "பாம்" டைட்டில் டீசர் வெளியீடு




'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தை இயக்கிய விஷால் வெங்கட் 'பாம்' என்று திரைப்படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தில், அர்ஜூன் தாஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். ஷிவாத்மிகா ராஜசேகர் அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார். இவர்களுடன், காளி வெங்கட், நாசர், அபிராமி, சிங்கம்புலி, பாலசரவணன், டிஎஸ்கே, பூவையார், சில்வென்ஸ்டன் ஆகியோர் முக்கிய துணை வேடங்களில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு டி. இமான்இசையமைக்கிறார். ராஜ்குமார்ஒளிப்பதிவு, படத்தொகுப்பு பிரசன்னா செய்துள்ளார்.

இந்நிலையில், 'பாம்' படத்தின் டைட்டில் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. படப்பிடிப்பு முடிந்த நிலையில் விரைவில் ரிலீஸ் ஆகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது,




# பீனிக்ஸ் படத்தின் டிரெய்லர் வெளியானது

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஜய் சேதுபதி. இவரது மகன் சூர்யா. இவர் ஏற்கனவே விஜய்சேதுபதியுடன் இணைந்து 'சிந்துபாத்' என்ற படத்தின் மூலமாக சினிமாவில் அறிமுகமானார். இந்த நிலையில், விஜய் சேதுபதி மகன் சூர்யா கதாநாயகனாக அறிமுகமாகி உள்ள 'பீனிக்ஸ்'. இந்த படத்தை இயக்குனர் அனல் அரசு இயக்கி உள்ளார். இப்படத்தின் மூலம் அனல் அரசு இயக்குனராக அறிமுகமாகவுள்ளார்.

பிரேவ் மேன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைக்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் டீசர் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ளது. இந்த படத்தில் சூர்யாவுடன் இணைந்து வரலட்சுமி சரத்குமார், நடிகர் சம்பத், நடிகை தேவதர்ஷினி ஆகியோரும் நடித்துள்ளனர்.

இதற்கு முன் வெளியான டீசரில், முதல் காட்சியே சிறுவர் சீர்த்திருத்த சிறையுடன் தொடங்கியது. கையில் விலங்குடன் குற்றவாளியாக சீர்த்திருத்த பள்ளியில் முகத்தை மூடிய நிலையில் சூர்யா காணப்பட்டார். பின்னர், ஒரு பாக்ஸிங் வீரரைப் போல சண்டைக் காட்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆக்சன் கதைக் களத்தில் உருவாகியுள்ள இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'பீனிக்ஸ்' படம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 14ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டு பின் ஒத்திவைக்கப்பட்டது. படத்தின் முதல் பாடலான 'யாராண்ட' பாடல் வெளியாகி வைரலானது. விஜய் சேதுபதியின் மகன் சூர்யா நடித்துள்ள 'பீனிக்ஸ்' படம் வரும் ஜூலை 4ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் 'பீனிக்ஸ்' படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# பதும் நிசங்கா அபார சதம்... இலங்கை அணி முதல் இன்னிங்சில் 458 ரன்கள் குவிப்பு



இலங்கை வங்காளதேசம் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொழும்பில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த வங்காளதேச அணி முதல் இன்னிங்சில் 79.3 ஓவர்களில் 247 ரன்களில் ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக ஷாத்மான் இஸ்லாம் 46 ரன்கள் அடித்தார். இலங்கை தரப்பில் அசிதா பெர்னண்டோ மற்றும் சோனல் தினுஷா தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தியது. 2வது நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்கு 290 ரன்கள் சேர்த்து 43 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தது. பதும் நிசங்கா 146 ரன்களுடனும், பிரபாத் ஜெயசூர்யா 5 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். லஹிரு உதரா 40 ரன்னிலும், சன்டிமால் 93 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

இந்த சூழலில் இன்று 3வது நாள் ஆட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து பேட்டிங் செய்த இலங்கை அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. பதும் நிசங்கா 158 ரன்களிலும், ஜெயசூர்யா 10 ரன்களிலும், தனஞ்சயா டி சில்வா 7 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் குசல் மெண்டிஸ் நிலைத்து விளையாடி அணியை முன்னெடுத்து சென்றார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 84 ரன்களில் ஆட்டமிழந்தார். முடிவில் முதல் இன்னிங்சில் இலங்கை அணி 116.5 ஓவர்களில் 458 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. வங்காளதேசம் தரப்பில் தைஜூல் இஸ்லாம் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் 211 ரன்கள் பின்னிலையுடன் வங்காளதேசம் 2வது இன்னிங்சில் பேட்டிங் செய்து வருகிறது.

# முதல் டெஸ்ட்: ஜிம்பாப்வே தென் ஆப்பிரிக்கா அணிகள் இன்று மோதல்

நடப்பு உலக டெஸ்ட் சாம்பியனான தென் ஆப்பிரிக்க அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது .இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி புலவாயோவில் நாளை தொடங்க உள்ளது. தென் ஆப்பிரிக்க டெஸ்ட் அணியின் வழக்கமான கேப்டனான டெம்பா பவுமா காயம் காரணமாக இந்த தொடரிலிருந்து விலகியுள்ளார். எனவே இந்த தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணியின் புதிய கேப்டனாக கேஷவ் மகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். ஜிம்பாப்வே அணியின் கேப்டனாக கிரேக் எர்வின் செயல்பட உள்ளார். இந்திய நேரப்படி நாளை மதியம் 1.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது .

# விக்கெட் வீழ்த்தாவிட்டாலும் பரவாயில்லை சிராஜ் இதை செய்யுங்கள் இந்திய முன்னாள் வீரர் அட்வைஸ்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இந்தியா நிர்ணயித்த 371 ரன்கள் இலக்கை இங்கிலாந்து அணி எட்டிப்பிடித்து அசத்தியது.

இந்நிலையில் முகமது சிராஜ் விக்கெட் எடுக்காவிட்டாலும் பரவாயில்லை ரன்களை வழங்க கூடாது என்று இந்திய முன்னாள் வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின் அறிவுரை வழங்கியுள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சிராஜிடம் என்னுடைய ஒரே கேள்வி என்னவெனில் உங்களால் ரன்கள் கொடுப்பதை குறைக்க முடியாதா? நீங்கள் விக்கெட்டுகளை கூட எடுக்க வேண்டாம். ஆனால் நீங்கள் ஓவருக்கு 4 5 ரன்களை கொடுப்பதால் பும்ராவை மீண்டும் பவுலிங் செய்ய வைக்க வேண்டியுள்ளது. பும்ராவால் எத்தனை அணைகளைக் கட்ட முடியும்?அவரையும் எதிரணியினர் சமாளித்து களைப்படைய வைக்கிறார்கள். அதனால் நீங்கள் ஜடேஜாவிடம் செல்ல வேண்டியுள்ளது. பிரசித் கிருஷ்ணா முதல் முறையாக விளையாடுவதால் அனுபவமற்றவராக இருக்கிறார். எனவே சிராஜ் அணியில் தன்னுடைய முக்கியத்துவத்தை உணர வேண்டும். மோர்னே மோர்கல் 20 ஓவரில் 2/43 என்ற வகையில் பவுலிங் செய்தது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? அதே போலத்தான் சிராஜ் செய்ய வேண்டும்.

எனவே நீங்கள் 58 ரன்களை கொடுத்து 2 விக்கெட்டுகள் எடுத்தாலும் பரவாயில்லை. அவர் அதில் திறம்பட செயல்பட்டால், அது மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். டெஸ்ட் கிரிக்கெட்டில் விக்கெட் எடுப்பது முக்கியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் நீங்கள் ஒருவரையொருவர் சார்ந்து பந்துவீச வேண்டும். இஷாந்த் சர்மா, மோர்னே மோர்கல் அதை அற்புதமாக செய்தவர்கள். நிச்சயமாக, நான் சிராஜிடம் அதையே செய்யச் சொல்லவில்லை. ஆனால் ரன்கள் கொடுப்பதை கட்டுப்படுத்துங்கள்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.